**பல்கலைக்கழகங்கள் சேமலாப நிதியம் - 2011**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புத்தகப் பெறுமதி பூச்சியமாக இருந்த போதிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 408,080 கிரயமான கணனி உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை.

#### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 91 ஆம் பிரிவின் பிரகாரம் சேமலாப நிதியத்தினை ஒழுங்குமுறைப்படுத்தல், நிர்வகித்தல், அதன் முகாமைத்துவம் என்பவற்றிற்காக ஆணைக்குழுவினால் கட்டளைச்சட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் பகிரக்கூடிய தேறிய வருமானம் ரூபா 1,505,456,593 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பகிரக்கூடிய தேறிய வருமானம் ரூபா 1,442,849,704 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 62,606,889 தொகையான முன்னேற்றத்திற்காக முதலீட்டு வட்டிக்கான வருமானவரி ரூபா 30,535,587 ஆல் குறைவடைதல் முதலீட்டு வருமானம் ரூபா 6,771,174 ஆல் அதிகரித்தல் மற்றும் முன்னைய ஆண்டிற்காக நிறுத்தி வைத்த இலாபம் ரூபா 25,401,976 ஆல் அதிகரித்தல் என்பன விசேடமாகத் தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பங்களிப்பு பணத்தினை பிழையாகக் கணித்தல்

பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு பணத்தினைக் கணிக்கும் போது 2011 மே 11 ஆந் திகதி வரை சம்பளத்துடன் கல்விப்படிகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ள பணத்தினை நிதியத்திலிருந்து மீள அறவீடு செய்வதற்கோ அல்லது எதிரீடு செய்வதற்கோ இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கிணங்க 2004 ஆம் ஆண்டிலிருந்து 2011 மே 11 ஆந் திகதி வரை பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், ஆணைக்குழு என்பவற்றினால் அண்ணளவாக ரூபா 248.57 மில்லியன் சேமலாப நிதியத்திற்கு மேலதிகமாகச் செலவுவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் XII ஆம் அத்தியாயத்தின் 95 ஆம் பிரிவின் பிரகாரம் பங்களிப்பாளர்களின் செலவில் உள்ள பணம் முழுவதும் அவர்களின் கணக்கு முடிவுறுத்தப்படும் திகதியிலிருந்து 03 மாத எல்லைக்குள் பங்களிப்பாளர்களுக்குச் செலுத்தப்பட வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டிருந்தும் 02 மாதங்களுக்கான கொடுப்பனவு உறுதிச்சான்றுகளின் மாதிரி ஒன்றிற்குரிய கொடுப்பனவு உறுதிச்சான்றுகளைப் பரிசோதனை செய்தபோது மீளாய்வாண்டின் போது மேற்கூறிய கால எல்லையினை மிகைத்ததன் பின்னர் கொடுப்பனவு செய்த ஐந்து சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இனங்காணப்படாத பங்களிப்பு மீதிகளின் பெறுமதி ரூபா 6,819,802 ஆக இருந்ததுடன் பங்களிப்பு மீதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பான காலப்பகுப்பாய்வும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் நிதியத்தின் தலைவருக்கு அவ்வப்போது தெரிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) இனங்காணப்படாத பங்களிப்பு கணக்குகள்

(ஆ) கட்டளைச்சட்டத்தினைத் தயாரித்தல்